புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்

விரோதிஞு (1889)
ஆவணி மீ ௨௨ உ
ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப்பட்டினம்: வருஷ-க்கு ரூ. ௨-௫௦.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௪-௫௦.
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. ௪-௫௦
தனிப்பிரதி சதம் ௪.
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. ௯-௫௦.
,, அரைக்கலம் ரூ. ௫-௦௦.
,, கால்கலம் ரூ. ௩-௧௫
,, ஒருஅங்குலம் -௬௫.
அடுத்தமுறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றி கவனிக்கப்படா.

புத்தகம் - ௩௨. } யாழ்ப்பாணம்—ரௌத்திரிஞு பங்குனி மீ ௧௧ உ; ௧௯௨௧-ம் ஆ௵ மார்ச்சு மீ ௨௪ உ. { இலக்கம் - ௨௯

DUPLICATE

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரான்றந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இரவில் மணி பார்க்கும்
8 மூலை ரேடியம்
ரிஸ்லெட் கெடியாரம்



செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்பமுடியாது.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ.
பார்க்டவுன் போஸ்டு,
மதராஸ்

(Y. 2.)

இலங்கையில் இருந்து ஒரு விளம்பரம்.

கீழ்ச்சொல்லும் குணங்கள் காணுமற்போனல்
மருந்துவிலை திரும்பக் கொடுக்கப்படும்.

அற்புதமான ஔஷதம்.

ஆயுர்வேத தாதுஸ்தம்ப வட்டிக்காவ

விலை 30-க்கு ரூபா 2 சதம் 50, அல்லது ரூபா 2 அணா 8.

தாதுபுஷ்டியும் இந்திரியக்கட்டும் இல்லாதவர்களுடைய நற்காலம்.

ஆச்சரியம்! மிக ஆச்சரியம்!!

உண்மையான ஔஷதம்.

ஒருவேலை மருந்தில் குணந்தெரியும். இந்த மருந்தானது சகலவித மேகச்சூடு, வெட்டைச்சூடு, பித்தச்சூடு முதலான உஷ்ணங்களைச் சமனாக்கி தாதுபுஷ்டி, சரீரபுஷ்டி, முகவசீகரம், தேசகாந்தி, மூளைக்குப் பலங்கொடுப்பதுடன் ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, அக்கினிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை, வீரியநஷ்டம் முதலான வியாதிகளைக் சுகமாக்கும். தேவாமிர்தம் இது ஒன்றுதான்.

ஆயுர்வேத பிரமேக நிவாரணி.

இதனால் குணமாகும் வியாதிகள்:—வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, இரத்தம்வடிதல் முதலான மேகவியாதி 21-க்கும் சஞ்சீவி.

இதன் விலை சீசா 1-க்கு ரூபா 2.

நமது மருந்துகள் வியாபாரஞ்செய்ய கமிஷன் ஏஜண்டுகள் தேவை. 100-க்கு 25 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆயுர்வேத தைலம்.

ஆச்சரியமான மருந்து ஒவ்வொரு வீட்டிலும்
அவசியம் இருக்கவேண்டியது.

இதை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

விலை சொற்பம்! குணம் அதிகம்!

இத்தமருந்தை வெளியேதேகத்தில்பூசுவதினுல்குணமாகும் வியாதிகள்.

(1) தலைவலி, கபால இடி, பிடரிவலி, தடிமன், ஜலதோஷம், நெஞ்சுவலி, மார்படைப்பு, இருமல், கக்கலிருமல், ஒருத்தலைவலி, வாந்தி முதலிய வியாதிகளும்,

(2) வாய்வு, வலிகள், நரம்புவலிகள், பிடிப்புகள், சுளுக்கு வலிகள், கைகால் குளிர்ச்சி, வெண்டை இழுத்தல், வயிற்றுவலி, வாந்திபேதிகாலங்களில் உண்டாகிற சகல வியாதிகளும்,

(3) வெட்டை வாய்வு இடுப்புவலி, முழங்கால்வலி, கணுக்கால்வலி, கைவலிகள், உளைச்சல்கள், வாதம் 80 வகைகளும்,

(4, பல்வலி, பல்லரணை, கன்ன வீக்கம், கட்டிகள், புறப்பாடுகள், மொழிவீக்கம், ரத்தக்கட்டு, சதை பிரட்டல் முதலியவைகளும்,

(5) தேள் கடி, பூரான் கடி, வலிக்கடி, விஷக்கடிகள், சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உண்டாகிற இன்னும் அநேக வியாதிகள். இந்த மருந்தை நோயுள்ள பாகங்களில் பூசினதும் சுகமாகும். விலை சீசா 1-க்கு ரூபா 1—0—0.

டாக்டர் எம். சந்திரசேகரம், ஆயுர்வேத வைத்தியசாலை,
நெ. 49, கச்சேரி ரோட், குருநாக்கல். (சிலோன்.)

My Address:—**Dr. M. Santherasakaram,**
Ayurvedic Medical Hall,
No. 49. Esplanade Road, Kurunegala, Post. (Ceylon).

Q. 9.

(M. 8)

M. Sultan Abdul Cader,
SULTANIN MEDICAL HALL, PORTONOVO, S. A. Dist.

துரையே! கவனியுங்கள்.

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும்
ஒரேவேளை லேகியம் சாப்பிட்டபிறகு பலத்தைக் கொடுக்கும்.

மெடல் பெற்ற

சிட்டிக் குருவிச் சத்தின் லேகியம்.

இந்தச் சிட்டுக்குருவிச்சத்தின லேகியத்தைப்போல் மற்ற வைத்தியர்கள் செய்து தந்தால் 2,000 ரூபா இனும் கொடுக்கப்படும்.

☞ நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், பேரும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணத்தமைந்த லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மனவாழ்க்கையிலே சுகானந்த இன்பத்தை யடைவர். ஆஹா! குணத்தாற் சிறந்ததுதான் என்ற பன்முறையும் புகழ்ச் புருஷரென்ற இப்பூவுலகில் பிறந்து வளர்ந்தவரும் பாக்யபருவத்தில்சிற்றின்ப ஆசையென்னும் மின்னூர்போகத்தில் ஆழ்ந்து தேகசத்தாரமாகிய நாதவிந்தைச் செலவழித்துச் செலவழித்து யௌவனபருவத்தில் வீரியவிர்த்திகுறைந்து போகசக்தியிழந்து ஆண்தன்மையற்ற கிழவர்போல மயங்கி நிற்கும் புருஷர்களும், வாதாதி மூலங்கை தோஷத்தால் உஷ்ணமுண்டாகிப் பிரமேக வெட்டைச் சூட்டால் இந்திரியம் ஜலம்போல் நீர்த்துப் போகத்தில் சீக்கிரம் ஸ்கலிதமாவோரும் நித்திரையில் ஸ்வப்ன ஸ்கலிதமுடையோரும் சுரம் மேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து தாது பலஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து பசிமந்தம், மலசிக்கல், இடுப்புவலி, கைகாலசதி முதலிய வியாதிகளால் வருந்துவோரும் மனோதத்துவ யுக்தியாளரான வக்கீல்கள், குமாஸ்தாக்கள் முதலியோரும் மற்றைய வேலையில் சிரத்தையுடையோரும் உபயோகித்தால் உற்சாக சந்தோஷமடைவார்கள். புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவார்கள். சதாகாலம் இந்திரிய ஸ்தம்பன மில்லாது போகத்தில் சீக்கிர ஸ்கலிதமுடையோருக்கு இது ஒரு இணையற்ற பரமசஞ்சீவியாகும். மருவலட்சுமீகரஸ்திரீகளுடன் கூடித் தமது பூரண ஆசையை நிறைவேற்றாது சஞ்சலிக்கும் புருஷர்களுக்குச் சித்தானந்த உற்சாகத்தைக் கொடுப்பதில் பேர்பெற்றது. பரீட்சைசெய்யும் நண்பர்களுக்குப் பலனைக் கொடுக்கத்தக்கது. இந்த லேகியம் சாப்பிடும் விபரம் நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும். அதிற் கண்டபடி சாப்பிடவும். இந்த மெடல்பெற்ற சிட்டிக் குருவிச் சத்தின் லேகியம் சாப்பிட்டுக் குணமில்லையென்று சத்தியமாய்ச் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். ஓர் தடவை பரீட்சைசெய்யவும்.

40 நாள்	16 பலம்	டப்பி 1-க்கு	விலை	ரூபா 10—0—0.
20 ,,	8 ,,	1-க்கு	,,	ரூபா 5—0—0.
10 ,,	5 ,,	1-க்கு	,,	ரூபா 2—8—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ இந்தலேகியத்துக்கு ஆடர்செய்யும்பொழுது இந்தப்பேப்பர்ப்பெயரைக்குறித்து எழுதவும்.

☞ பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிறதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ் ரூபா 2-0-0 யும் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதும் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாசம்:—
எம். சுல்தான் அப்துல்காதர்,
சுல்தானியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னார்க்காடு ஜில்லா.

எமது சிலோன் ஏஜெண்டுகள்:—
T. D. மதுரைநாயகம் அண் கோ.,
ஞானசுந்தர வைத்தியசாலை,
நெம் 81, செட்டித்தெரு,
கொழும்பு.

சாலாமிஸ்ரி லேகியம். 1.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதரூ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீமூள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துக்குள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௫ அரைஇறாத்தலுக்கு ரூபா ௧௦. கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியம் மருந்துக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும். இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 91 முதல் மருதானை, கொழும்பு.

தனலக்ஷ்மி
சில்க் சேலைகள்.

Q. 10.

கலியாணச் சடங்கு முதலிய விசேஷகாலங்களிற் பாவிக்கக்கூடியதும், இந்தியாவில இந்தியர்களால் தயாரிக்கக்கூடியதும், புதுமாதிரியானதும், கெட்டிச் சாயமுமுள்ளது. உடை அழுத்தமானதும், உடல் பூராவும் பலவிதமான பூவேலைகள் செய்ததும், சின்னக் கரையுள்ளதும், அழகான முந்தியுமான பட்டுச் சேலைகள்.

எல்லா நிறங்களிலும் இருக்கின்றன.

7 கஜம் சேலை 1 ரூபா 27—0—0.
7½ கஜம் சேலை 1 ரூபா 30—0—0.
8 கஜம் சேலை 1 ரூபா 35—0—0.
9 கஜம் சேலை 1 ரூபா 10—0—0

ஒரே தடவையில் 6 சேலைகள் வாங்குகிறவர்களுக்கு 100 ரூபாக்கு ௫ வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

தனலட்சுமி சுதேச ஜவுளி மளிகை,
10, அம்மன்சன்னதி,
மதுரை,
தென் இந்தியா.
Tel. Address: "Murabari", Madura, (S. INDIA.)

புதிய கையொப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம்,
"இந்துசாதன" மானேசர்.

கதிரமலைப்
பேரின்பக்காதல்

இரண்டாம் பதிப்பு

வெளிவந்துவிட்டது.

விலை சதம் ௧௨.

இந்துசாதன மானேஜர்,
வண்ணார்பண்ணை.

குடிசன மதிப்பு விளம்பரம்.

G. 88.

1921-ம்ஆ பங்குனிமீ 18-ந்உ எடுக்கப்பட்ட குடிசன மதிப்பில் கணக்கெடுக்கப்படாதவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் தங்களுடைய பெயரையும் விலாசத்தையும் குடிசன மதிப்புக் கந்தோருக்கு அனுப்பும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எல். ஜே பி ரேணர்,
குடிசன மதிப்பு அதிகாரர்.

குடிசன மதிப்புக் கந்தோர்,
கொழும்பு 19-3-21.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தானவரவு.

இ-ழும் பங்குனிமீ 3-ந்உ புதன்கிழமை காலை மாதகலை சொந்தவூராக வுடையவரும் இப்பொழுது உடுப்பில் வசிப்பவருமாகிய பிரமஸ்ரீ. ச. செல்லப்பாக் குருக்களின் புத்திரன் சோதிலிங்க ராமசந்திசர்மாவுக்கு உரும்பராய்ப் பிள்ளையார் கோவிலில் உபநயன கருமம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அச்சமயத்தில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா 1-பெற்றோம்.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—ரௌத்திரிஞுபங்குனிமீ ௧௧உ

சாதியநாட் கொண்டாட்டம்.

(The National Day Celebration.)

இத்தினக் கொண்டாட்டம் சென்ற சில வருடங்களாக யாழ்ப்பாணத்திலுங் கொண்டாடப்பட்டு வருகின்றது. கடந்த ஏனைய வருடங்களைக் காட்டிலும் சென்ற வருஷம் சற்று விசேஷமாக இது கொண்டாடப்பட்டதெனலாம். ஆயினும் நம்மனோர் இத்தினக் கொண்டாட்டத்தின் விசேஷத்தை இன்னமும் உள்ளபடி விளங்கிக்கொள்ளவில்லையென்பது எல்லோரும் குறித்த கொண்டாட்டத்திற் சேராமையினாற் புலப்படுகின்றது. அரசாங்க உத்தியோகத்தர் குடையைக் கண்டு புதுமாடு வெருட்சிகொள்வதுபோல் சாதியநாட் கொண்டாட்டமென்றவுடன் ஏதோ இராசத்துரோகமான செயலெனவெண்ணித் தூரத்தில் நிற்கின்றார்கள். இவர்கள் செயலால் அதிகாரிகள் தாமும் இக்கூட்டத்திற் சந்தேகங்கொள்ளத்தக்கதாக விருக்கின்றது. நமது சகோதரர்களாகிய சிங்களர் இத்தினத்தை எத்துணை ஆர்வத்துடனும் அபிமானத்துடனுங் கொண்டாடி வருகின்றனரென்பதைத்தானும் நம்மவர்கள் சிந்திக்கின்றார்களில்லை. இந்தியாவிலுள்ளவர்கள் இக்கொண்டாட்டத்தில் எத்துணை ஆர்வமும் அபிமானமு முடையவர்களா யிருக்கின்றார்களென்பதையும் நம்மவர்கள் கவனிக்கின்றார்களில்லை. கற்றவர்கள் இக்கொண்டாட்டத்தை அலட்சியஞ் செய்யக் கல்லாதவர்கள் இதனால் வரும் நன்மை யாதொன்று மில்லை யென்னும் விளக்க முடையவர்களாக விருக்கின்றனர். சென்ற வருஷம் நிகழ்ந்த சாதியநாட் கொண்டாட்டத்தில் உபந்நியாசஞ் செய்த சிலர் சாதியநாள் என்ன நோக்கத்துடன் கொண்டாடப்படுகின்றதென்பது தமக்கு விளங்கவில்லையென்று கூறியுள்ளனர். உண்மையாக, இத்தினத்தின் பரமரகசியங்களை விளங்காமையினாலேயே இவர்களெல்லாரும் இத்துணை அலட்சியமாக விருக்கின்றார்கள்.

தமிழர்களாகிய நாங்கள் இருநூற்றுக்கு மேற்பட்ட வருடங்களாக அந்நிய மன்னர் பரிபாலனத்தின்கீழ்ப்பட்டமையினால் எங்கள் சாதிக்குரிய ஆசாரம் அநுஷ்டானம் கல்வி கைத்தொழில் உடை நடை பாவனை முதலியவற்றையெல்லாம் காலகதியிற் கைவிட்டு அந்நியரைப் பின்பற்றத் தலைப்பட்டுவிட்டோம். இன்னமுஞ் சிலகாலம் இங்ஙனஞ் செய்துவருவோமாயின் மயிர்க்குட்டிப்புழு வண்ணாத்திப்பூச்சியாக மாறியவாறு நாங்களுந் தமிழரென்ற பேதங்காட்டத் தெரியாமல் மாறுதல் அடைந்துவிடுவோமென்பது திண்ணம். எங்கள் சாதியை நாங்கள் நிலைநிறுத்தவேண்டுமானால், நாங்கள் மற்றுஞ் சாதியினரால் மதிக்கப்படவேண்டுமானால், எங்கள் பிற்சந்ததியார் தாங்களும் மிகப் பூர்வீகரான தமிழர்களின் வழித்தோன்றல்களெனப் பெருமிதமுற்று விளங்க வேண்டுமென்று மெண்ணம் எங்கட்கு உண்டானால், எம்மைப் பரிபாலிப்பவர்களும் எம்மை யொரு சாதியினராக மதித்து எங்களைப் பொருட்படுத்த வேண்டுமானால், நாங்கள் எங்களுக்குரிய சாதி யநுஷ்டானம் கல்வி கைத்தொழில் கமத்தொழில் உடை நடை பாவனை முதலியவற்றையெல்லாம் பழையபடி கைக்கொள்ளவேண்டும். இங்ஙனம் கைக்கொள்ளும்பொழுது எங்கள் சாதியின் அபிவிருத்திக்குப் பிரதிகூலமானவை எவைகளோ, அவைகளை விலக்கி வைப்பதனால் நன்மையன்றி யாதுங் குறைவு வாராது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலமுறையினானேயென்பர். ஆனால் பழையனவுள் நன்மையானவற்றை நாம் ஒருபோதும் கைநழுவ விடவொண்ணாது. அங்ஙனஞ் செய்வதனால் எங்கள் சாதியப் பெருமைக்கு நாமே அழிவு தேடியவர்களாவோம். அங்ஙனமாயின் வருடத்தில் ஒருநாள் மாத்திரம் கூடி இப்படிக் கொண்டாட்டம் நடத்துவதனால் நாங்கள் அலட்சியஞ் செய்தனவெல்லாம் மீண்டு விருத்தி யடையுமோ வென்று ஆசங்கை நிகழ்த்தக் கூடும். வருடம் ஒருமுறை கொண்டாடுவதனால் ஒருபோதும் விருத்தியுறமாட்டாவென்பது சிறுபிள்ளைகளு மறிந்தவிஷயம். எங்கள் சாதீய நலத்தின் பொருட்டு அல்லும்பகலும் உழைத்துவருதல் தமிழர்களாகிய எங்கள் எல்லார் மீதும் பொறுத்த கடனாகவிருத்தல்வேண்டும். அங்ஙனம் உழைத்து வருபவர்களை இடைவிடாது ஊக்கப்படுத்துவதற்குப் பல தொழிலாளர்களின் பிரதிநிதிகளையுங் கொண்ட ஒரு சாதீய மகாசமாஜம் இருத்தல்வேண்டும். வருடம் முழுவதும் உழைத்து அடைந்த விருத்தியைச் சனங்கட்கு இச்சாதீய மகாசமாஜ மூலமாகக் குறித்த சாதீய தினத்தன்று எடுத்து விளக்கிப் பெருங் கொண்டாட்டம் நடத்தல்வேண்டும்.

இம்முறை தமிழ்வருடப்பிறப்புத்தினத்தன்று இச்சாதீய நாள் யாழ்ப்பாணம் முற்றவெளியில் மிகவிசேஷமாகக் கொண்டாடப்படுமென அறிகின்றோம். அச்சமயத்தில் தமிழர்களாயுள்ளவர்களெல்லாரும் சமயபேதம் சாதிபேதம் முதலியன பாராட்டாது ஆங்குச் சமுகமாகி அங்குச் செய்யப்படவிருக்கும் உபந்நியாசங்களையும் வேறு சில காட்சிகளையும் கவனித்து, நமது சாதீய விருத்தியின் பொருட்டு அடுத்த வருடம் நாம் எவ்வாறு உழைத்தல்வேண்டுமென்பதைச் சிந்தித்து நியதிசெய்துகொள்ளல்வேண்டும்.

கடவுள் சர்வதாரகர்.

சராசரப் பிரபஞ்சங்கள் அனைத்தும் கடவுளையே பற்றுக்கோடாகக் கொண்டிருத்தலினால் கடவுள் சர்வதாரகர் எனப்படுவர். கடவுளைப் பற்றுக்கோடாகக் கொள்ளாது யாதொரு பொருள் தனித்திருத்தல் கூடுமானால், அப்பொருள் சுதந்திர முடையதாதல் வேண்டும். கடவுள் ஒருவரே சுதந்திரரும் ஏனைய பொருள்கள் எல்லாம் பரதந்திர முடையனவும் ஆதலால் அந்தப்பொருள்கள் அனைத்தும் கடவுளைப் பற்றுக்கோடாகக்கொண்டுள்ளன என்பது நன்கு பெறப்படும்.

கடவுளை ஒழித்துப் பிற பொருள்களுஞ் சுவதந்திரமுடையனவெனக்கொள்வதுண்டானால், அந்தப் பொருள்களும் கடவுளர் எனப்பட்டு அனேகேச்சுரவாதமாகும். சுவதந்திரமுடைய பொருள்கள் எல்லாம் கடவுளர் எனப்படுமாறு எங்ஙனம் எனின், சுவதந்திரமுடைமையாவது பின்னொரு பொருளது அதிகாரத்துக்கு அமையாமை. அங்ஙனம் அமையாமை அவ்வதிகாரங்களுக்கெல்லாம் மேற்பட்ட அதிகாரத்தை உடையாருக்கு மாத்திரமே அமையும். அங்ஙனம் மேற்பட்ட அதிகாரத்தை உடைமை கடவுள் ஒருவருக்கேயன்றிப் பிறருக்குளதாதல்கூடாதாகலின் சுவதந்திரமுடையர் எல்லாம் கடவுளர் எனப்படுவர் என்பது நன்கு போதரும். கடவுளர் பலர் இருத்தல் கூடாதென்பது "கடவுள் ஏகர்" என்னும் தலைப்பின்கீழ் விளக்கப்பட்டுளதாதலின் கடவுள் ஒருவரே சுவதந்திரர் என்பதும், ஏனைப் பொருள்கள் எல்லாம் பரதந்திரமுடையன என்பதும் நன்கு சித்திக்கும். பிரபஞ்சப் பொருள்கள் எல்லாம் பரதந்திரமுடையனவாகவே, அவற்றுக்கோர் பற்றுக்கோடாயுந் தனக்கோர் பற்றிலதாயும் உள்ள பொருள் ஒன்று உண்டென்பது தானே போதரும். இந்தப் பொருளே கடவுள் எனப்படுவது. இந்தப் பொருள் சுவதந்திர முடையதாகவே இது பரதந்திரமுடைய பொருள்களுக்கெல்லாம் தாரகமாய் அமைந்து விளங்கும் என்று சாத்திரங்கள் எடுத்து விளக்கும்.

கடவுள் சர்வதாரகராய்ச் சர்வாதார மூர்த்தியாய் அமைந்து விளங்குவர். எனவே, அவரை ஆதாரமாகக் கொண்டுள ஆதேயப் பொருள்களும் அநாதிதொட்டு அமைந்து விளங்குவன என்பது தானே சித்திக்கும். அங்ஙனம் இல்லாக்கால், அவர் சர்வாதாரமூர்த்தியாய் அமைந்தமை யாதொரு இடைக்காலத்திலே அவருக்கு எய்தியதென்பதும், எனவே அவர் விகாரி என்பதும் பெறப்படுமாதலின், அவர் அநாதிதொட்டுச் சர்வாதார மூர்த்தியாய் அமைந்து விளங்குதற்பொருட்டு வேண்டப்படும் ஆதேயப் பொருள்களும் அநாதிதொட்டே உள்ளன என்பது நன்கு போதரும். இதுபற்றியே சற்சமயமாகிய சைவசமயம், ஆதாரப்பொருளாகிய பதியும், ஆதேயப்பொருள்களாகிய பசுபாசங்களும் அநாதிப் பொருள்களாம் என்று சிறப்புற எடுத்து விளக்கும்.

ஆதேயப் பொருள்களும் அநாதிதொட்டு அமைந்து விளங்குவனவாம் என்று கொள்ளுமிடத்தால் கடவுளை ஆதாரமாகக்கொண்ட ஆதேயப்பொருள்கள் அனைத்தும் அநாதிக்கண்ணவாம் என்பது பெறப்பட்டுவிடமாட்டாது. மாயையில் நின்று உற்பத்தியாகும் தத்துவதாத்துவிகங்கள் தாமும் ஆதேயப் பொருள்களேயாமாயினும், அவைகளுக்கெல்லாம் உற்பத்திநாசங்களுண்டு. இவற்றுக்குக் கடவுள் ஆதாரகர்த்தாவாக விளங்குதல் பற்றி, இவற்றளவிலே கடவுளை விகாரி என்று முடிப்பது கூடாது. காலந்தோறுந் தோன்றி அழியும் ஆதேயங்களாகிய தத்துவதாத்துவிகங்கள் எல்லாம் நித்தியநிலைபேறுடைய ஆதேயங்களாகிய ஆன்மாக்களுடைய பிரயோசனங் கருதி ஏற்ற ஏற்ற காலங்களிலே பூரணஞானமுடைய கடவுளால் ஏற்ற ஏற்றவாறு ஆக்கி நிறுத்தி அழிக்கப்படுமாதலால், அவற்றது ஆக்கநிலை அழிவுபற்றிக் கடவுள் நிர்விகாரியாவதில்லை. ஆன்மாக்களுக்கு அருள் புரிதல்வேண்டுமென்பதே கடவுளுடைய திருவுள்ளத்தில் எப்போதும் ஒருவாறுமே நிகழ்ந்துகொண்டிருப்பதொரு எண்ணமாதலால், அந்த எண்ணம் சித்தித்தற் பொருட்டாக ஆன்மாக்களுடைய அவ்வக்காலத் தகுதியளவாகச் செய்யப்படும் அவ்வக்காரியங்கள் அனைத்தும், அந்த ஒரே எண்ணம் சித்தித்தற்பொருட்டுச் செய்யப்படும் உபாயங்களாம். ஆகவே அவ்வுபாயங்கள்பற்றிக் கடவுளை விகாரியென்பது ஒருவாற்றானும் பொருந்தாதென்க. இந்த உபாயங்களை அவர் செய்தருளும்பொழுதெல்லாம், அந்தச் செயலின் பயனாகத் தோன்றிய தத்துவிகதாத்துவங்கள் தம்மையுந் தாமே தாங்குகிற்பர். அங்ஙனந் தாங்குவார் இல்லையாயின், அவைகள் நிலைபெறுமாறும், அந்த நிலைபேறு காரணமாக ஆன்மாக்கள் பயன் பெறுமாறும் இல்லையாதலால் அவரே அவற்றைத் தாங்கிநின்று அங்ஙனந் தாங்குதல் காரணமாக அவற்றின் காரணங்களையும் தாமே தாங்கிநிற்பர் என்பதனைக் காட்டி தாம் சர்வதாரகர் என்னும் உண்மையை நாம் எல்லாம் அறிந்தேறுமாறு புலப்படத் தெருட்டியருளுவார்.

கடவுள் இங்ஙனம் ஒவ்வொருசெயலைச் செய்வது அவரது தடத்தநிலை வாயிலாக என்றும், அவருடைய சொரூபநிலை இத்தத் தடத்தநிலைக்கு அப்பாற்பட்டதென்றும் சாத்திரங்கள் எடுத்து விளக்கும். அவருடைய சொரூபநிலை இவ்வியல்பினதென்று எடுத்துக் கூறுந்தகைத்தன்றாதலின், அந்நிலைக்கு இச்செயல்கள் உரியன என்பது மனவாக்குகளுக்கு அமையாததொன்று. அந்த மனவாக்குகளுக்கு அமைந்துவிட்டதென்று வாதிப்பதுபோலும் ஓர் விருத்தமாகும். அதுபற்றியே, காருண்ணிய வடிவாகிய அவருடைய செயல்கள் எல்லாம் அவருடைய தடத்தவடிவத்தின்நின்றே சுரப்பன என்று சாத்திரங்கள் சாதிக்கும். இதுபற்றியே, அவருடைய செயல்களெல்லாம் அவருடைய சத்தியின்பாற்படுத்திச் சாத்திரங்கள் எடுத்து விளக்குவதுமாம். இத்தச் சாத்திரங்களின் உண்மைப்பொருளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லார் சிலர், கடவுளாற் செய்யப்படுதல் கூடாததொரு செயலை அவருடைய சத்தி செய்யுமென்றல் எங்ஙனம் பொருந்தும் என்று ஆசங்கிப்பர். கடவுளாற்செய்யப்படுதல்கூடாததென்று யாதொரு செயல் நம்போலியரால் விலக்கப்படுதற்குரியதன்று, அவர் யாதொரு செயலைச் செய்வதுண்டாயின், அவர் எங்கள் மனம் வாக்குகளாற் கிரகிக்கப்படற்குரியராய்விடுவராதலின். அவரிடத்திலே எங்ஙனம் கிரகிக்கப்படுதற்குரிய யாதொரு செயல் கேட்கப்படாதென்று சாத்திரங்கள் எடுத்துவிளக்கும். அங்ஙனமாயினும், சிற்றறிவும் சிறுதொழிலுமுடையராகிய எங்களுக்குப் பிரயோசனமுடைய அருட்சுரப்பு அவர்பாலுண்டாதலால், எங்கள் பிரயோசனங் கருதி நிகழுஞ் செயல்கள் எல்லாம் அவருடைய அருளின்பாற்படுத்திச் சாத்திரங்களால் வியபதேசப்படும். இந்த அருள் அவருடைய ஒரு சிறு கூறு. இந்தச் சிறு கூற்றால் வெளிப்படுவனவே அவருடைய செயல்களும் குணங்களுமாம். இந்தச் சிறுகூற்றுக்கும் அவருக்கும் பெரிதும் பேதமுண்டாதலால், சாத்திரங்கள் அவரையும் அவருடைய அருட்சத்தியையும் வேறுபடுத்துக் காட்டும். இதுபற்றியே சாத்திரங்கள் எல்லாம், அவருடைய சந்நிதியிலே பஞ்சகிருத்தியங்களும் நிகழ்வனவன்றி அவர் யாதொரு கிருத்தியத்தைச் செய்வார் அல்லர் என்று பிரதிபாதிப்பது. அவருடைய சந்நிதியாவது அவருடைய அருளேயாகும். இந்த அருள் அவர் ஆன்மாக்களுக்கு ஒருவாறுவெளிப்படும் தடத்தமன்றி தத்துவதாத்துவிகங்களைக்கடந்த அவருடைய சொரூபமன்று. இதுவே பதிக்கும் அவருடைய திருவருளுக்குமுள்ளதாகிய பேதமாகும். ஒருவாறு வெளிப்படுதல்பற்றி ஒருங்கு வெளிப்படுவதாகாது. ஒருவாறு வெளிப்படுதல்பற்றி ஒருங்கு வெளிப்படுதல் கூடாமை விருத்தமுற்றிடாது. ஒருவாறு வெளிப்படுவது இல்லையாயின் கடவுள் நிஷ்பிரயோசனராய்விடுவர். இங்ஙனம் வெளிப்படுவதே அவருடைய அருள் எனப்படுவது. இந்த அருள்வாயிலாய் அவர் அனைத்தையுந் தாங்குபவராதலின், அவர் சர்வதாரகர் எனப்படுவர் என்க.

சமாச்சாரம்.

காலநிலை:—வெயிலகோரம் மிகவதிகம். பங்குனியாகியும் பனி குறையவில்லை. சூடுமிதிப்பு பெரும்பான்மையும் முடிந்துவிட்டது. சின்னமுத்து சின்னம்மை குறைந்தபாடில்லை.

நெல் விலையேறுகின்றது:—நெல்லின் விலை வரவர ஏறுகின்றது. இப்பொழுது ஒரு மூடை நெல் 10 ரூபாவாக விலைப்படலாயிற்று.

யாழ்ப்பாணம் சரஸ்வதி விலாச சபை:—இச்சபையார் வருகிற சனிக்கிழமை யாழ்ப்பாணம் ரிஜ்வே மண்டபத்தில் அரிச்சந்திர நாடகம் மீட்சி காண்டத்தை நாடகமாக நடத்த நிச்சயித்திருக்கின்றனரென அறிகின்றோம்.

சலாபத்தில் முத்துக்குளித்தல்:—சில வருடங்கட்கு முன் சலாபத்தில் யந்திரமூலமாக அரசினர் முத்துக்குளித்தனர். அதன் பின் அங்கே முத்துக்கள் விளையாதிருந்தன. ஆனால் இப்பொழுது சோதித்து 1924-ம்ஆ முத்துக்குளிக்கலாமெனக் கண்டிருக்கின்றனர்.

சங்கீத கதாப்பிரசங்கம்:—வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி விசுவேசப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நிகழும் பங்குனிமீ 12உ (25-3-21) வெள்ளிக்கிழமை 6 மணி தொடக்கம் கொக்குவில் மேற்கு ஸ்ரீ க. குமாரசுவாமிப் பிள்ளையவர்களால் ஒரு சங்கீத கதாப் பிரசங்கஞ் செய்யப்படும். ச.டி.த.

யாழ்ப்பாணங் கைத்தொழிற் பாடசாலை:—இப்பாடசாலையிலே எவ்வித கைத்தொழில்கள் பயிற்றலாமென்பதை யோசிக்கத்தக்க அரசாட்சியார் ஓர் கொம்மிற்றியை நியமித்திருக்கின்றார்கள். ஏசண்டர் மெஸ். B. கொன்ஸ்டன்ரைன், கௌரவ P. ராமநாதன், சேர் A. கனகசபை ஸ்ரீ A சபாபதி, கனம். வாதர்பான்ட், கனம். J. பாய்க்கர், கனம். A. A. உவாட், ஸ்ரீ முத்துக்குமாரு மணியகாரன் என்பவர்களே அக்கொம்மிற்றி அங்கத்தவர்கள்

பிரதிநிதித் தெரிவு:—புதிய சட்டநிரூபண சபைக்கு அங்கத்தவரைத் தெரியும் விஷயத்திலே தற்போது அரசாட்சியார் பலவகை முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். வருகிறமாசக் கடைசியிலே தெரிவு நடக்கும். தெரிவுக்குச் சம்மதி கொடுக்கத் தகுதியுடையோர் நாமங்கள் அரசாட்சியாரின் கசற் பத்திரிகையில் 423 பக்கங்களிலே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அத்தொகைக்குரிய விபரத்தை அடியில் வரும் அட்டவணையிற் காண்க.

நகர ஐரோப்பியர்	183 பேர்
கிராம ஐரோப்பியர்	807 ,,
வர்த்தக சங்கத்தவர்	76 ,,
பறங்கிக்காரர்	1343 ,,
கீழ்நாட்டுச் சிங்களவர்	11 ,,
மேல்நாட்டு A டிவிஷன்	6809 ,,
மேல்நாட்டு B டிவிஷன்	9526 ,,
கொழும்பு நகரசங்கம்	4487 ,,
மத்திய மாகாணம்	2211 ,,
வடமாகாணம்	13885 ,,
தென்மாகாணம்	7723 ,,
கீழ் மாகாணம்	806 ,,
வடமேல் மாகாணம்	4814 ,,
வடமத்திய மாகாணம்	385 ,,
ஊவா மாகாணம்	507 ,,
சப்பிரகாம மாகாணம்	1344 ,,

உ. தா - லை.

வாராந்த புகைரதப் பிரயாணச் சீட்டுகள்:—இலங்கைப் புகைரதப் பகுதியார் சென்ற சிலவாரங்களாக முதல்வகுப்பிற் பிரயாணஞ்செய்பவர்கட்குமாத்திரம் வெள்ளிக்கிழமை பின்னேரம் புறப்பட்டு அடுத்து வரும் திங்கட்கிழமை காலை, போகுஞ்செலவுடன் போதற்கும் வருதற்குமான பிரயாணச் சீட்டுகள் உதவிவருகின்றார்கள். இதுவுங் கொழும்புக்கு மாத்திரஞ் சென்றுமீளலாமென்றுசொல்லப்படுகின்றது. இரண்டாம் மூன்றாம் வகுப்பிற்பிரயாணஞ் செல்லுபவர்கட்கு இச்சலாக்கியமில்லை. புகைரதஅதிகாரிகள் முதல்வகுப்பிற் பிரயாணஞ்செய்தற்கு

ஆற்றலுள்ள செல்வர்களுக்கு இன்னஞ்சகாயஞ் செய்வதும், இரண்டாம் வகுப்பிற்பிரயாணஞ் செய்யும் செல்வத்திற் குறைந்தவர்கட்கும் மூன்றாம்வகுப்பிற் பிரயாணஞ்செய்யும் ஏழைகட்கும் சகாயஞ் செய்ய மனங்கொள்ளாமலிருந்ததும்யாதுகாரணம்பற்றியோ அறியேம். ஏழைகளன்றோ இவ்வித சகாயங்களைப் பெரிதும் அடையத் தக்கவர்கள். ஐரோப்பியர் மூன்றாம்வகுப்பிற் பிரயாணஞ் செய்யாவிட்டாலும் இரண்டாம்வகுப்பிற்பிரயாணஞ் செய்கின்றார்களே. மேலும்புத்தத்திற்கு முந்திசனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை பின்பகல்வரையில் எவ்வகுப்பிலும் ஸ்தானங்கட்கும் பிரயாணஞ்செய்யத்தக்க ஏற்பாடிருந்தது. அந்த ஏற்பாடு இனிமேலும் வருஷாவருஷம் அங்ஙனம்வரும்வரைக்காயினும் அதிகாரிகள் வாரத்தில் மூன்றுவகுப்பிலும் ஒரேசெலவிற்பிரயாணஞ் செய்யத்தக்க ஒழுங்குகள் செய்வார்களாயின் அதானங்கட்குப் பெருபகாரமாயிருக்கும்.

ஆனைக்கோட்டையிற் கொலை:—சில தினங்கட்கு முன் ஆனைக்கோட்டையில் இருவர் சண்டையிட்ட சமயத்தில் ஒருவன் கல்லால் மற்றவனுக்கெறிய அவன் பலகாயமடைந்து பின் இறந்தனனென வறியலானோம்.

அன்டேஷன் சந்தை:—இப்பெயரிய சந்தையொன்று புதிதாய்க் கொழும்பிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இது காலஞ்சென்ற அன்டேஷன் தேசாதிபதியவர்களுக்கு ஞாபகமாக அமைக்கப்பட்டதாம்.

வதுளைப் புகைரதப் பாதை:—டெமோட்ரு என்னுமிடத்திலுள்ள புகைரதஸ்தானத்திலிருந்து சனங்கள் புகைரத மார்க்கமாகப் போக்குவரவு செய்தற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. பண்டாரவளைக்கும் மட்டக்களப்புக்குமிடையே இதுகாறும் ஓடிய தபால் மோட்டர் ரதம் இப்பொழுது டெமோட்ருவிற்கும் மட்டக்களப்புக்குமிடையே ஓடுகின்றது.

ஒரு சிறுமிக்கும் தாத்தாவுக்கும் விவாகம்:—வங்காளத்திலுள்ள பப்னாவில் சுமார் எழுபது வயதுசென்ற ஜாத்சந்திர விசுவாஸ என்பவருக்கும், பதினொரு வயதுள்ள ஒரு பெண்ணுக்கும் விவாகம் நடந்ததாம்.

பேசும் வன்மையுள்ள படங்கள்:—சுவீடின் தேசத்தில் டபீஸ்டர்ஸ்பேன்பெர்க்லாந்து என்னும் பெயரையுடைய என்ஜினியர் ஒருவர் சென்ற பத்துவருடங்களாகப் பெருமுயற்சி செய்து பேசக்கூடிய வன்மையுள்ள படங்களை அமைத்துப் பலர்க்குக் காட்டி வருகின்றனராம். இப்படங்களை அமைக்கும் கருவியைத் திட்டஞ் செய்வதற்கு ஒரு கம்பெனியார் மேற்படி என்ஜினியருக்கு 36000-பவுன் உதவியிருக்கின்றனராம்.

தேகவியோகம்

நெடுங்காலமாக யாழ்ப்பாணப் பொலிஸ்கோட்டில் நீதிபதியாகவிருந்து பின்னர் ஆறினர் வேதனம் பெற்றுவந்தவரும் ஆரம்பத்தில் ஒரு பிறக்றாக விருந்தவருமாகிய மிஸ்டர் T. M. தம்பு அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை பறங்கித்தெருவிலுள்ள தமது கிருகத்தில் புத்திர பௌத்திரர்களும் பல இனத்தவர்களும் பிரலாபமுறத் தேகவியோகமாயினர். இவருக்கு வயசு 82 வரையி லிருக்குமாம்.

—சன்மார்க்கபோதினிப் பத்திராதிபர் மிஸ்டர் S. தம்பிமுத்துவின் மனைவி அன்னு தங்கமுத்து இந்த மார்ச்சு௴ 14-ந்௳ தேகவியோகமாயினர் என்னுந்துக்க செய்தியை அறியலானோம்.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

தமிழபிமானி:—இது, தென்னிந்தியாவிலுள்ள அம்பாசமுத்திரம் என்னுமிடத்திலிருந்து சஞ்சிகை ரூபமாக வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீ தமிழ்ப்பூஷணம் வாசுதேவராவ் கேய்க்வாட் அவர்கள் ஒருவருடத்திறகுப் பத்திரக்கிரயம் ரூபா 2 தனிப்பத்திரிகை விலை அணு 4. இதன்கண் பல அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. எமக்கனுப்பிய பிரதியை நன்றியறிதலுடனேற்றும்.

துன்மதிவருட இந்துக்கலண்டர்:—இது கோண்டாவில் பிரமஸ்ரீ. சு. சதாசிவக்குருக்களால் வழக்கம்போலத் தொகுத்து அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. எமக்குதவிய பிரதியை உவந்தேற்றும்.

ஜகதாம்பாள்:—இது "பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற் தமக்கின்னா, பிற்பகற்றாமேவரும்" என்னுங் குறளுக்கு இலக்கியமாக ஸ்ரீமதி. க. நவரத்தினம்மாள் இனிய தமிழ்வசனநடையில் எழுதப்பெற்ற ஒரு சிறிய நூலாகும். எமக்குதவிய பிரதியை அன்புடனேற்றும்.

இந்திய சமாச்சாரம்.

சென்னைப் பிரதம நிருபர் எழுதுகிறார்.

சிந்தாத்திரிப்பேட்டையில் நேபியர்பார்க் எனப்படும் விக்டோரியாத் தோட்டமொன்றுளது. சிந்தாத்திரிப்பேட்டை மிகவுங் குடிசன நெருக்கமுள்ள பட்டினமாகும். இங்கே சனங்கள் சிரமந்தீர்க்கும்படி சென்று வெளியான காற்றையனுபவித்துப் போவது வழக்கம். இது சிறுவர்கள் விளையாடுவதற்கு ஒரேயொரு ஸ்தானமாகவும் விளங்குகிறது. சென்னை நகர சங்கத்தார் இப்பொழுது இவ்விடத்தில் சுகுணவிலாச சபையென்னும் நாடக சபையாருக்கு ஒரு நாடக மண்டபம் அமைத்தற்கு அநுமதி செய்துவிட்டனர். இச்சுகுணவிலாசசபையின் அங்கத்தவர்கள் செல்வஞ் செல்வாக்குள்ளவராகையாலும் இவருட் பலர் நகர சங்கத்து அங்கத்தவரானதாலும் இவ்விதமான அநுமதி கிடைத்தது. இங்ஙனஞ் செய்கைமை மற்றுஞ் சபைகட்கெல்லாம் பெரும் வசதியீனத்தை விளைக்கலாயிற்று. சென்னை 'பிஷப்' இவ்விஷயத்தை அதிகாரிகட் கெழுதுவதைப் பார்க்கிலும் மகாத்மா காந்திக்கு விண்ணப்பஞ் செய்வதே நலமென்றும், அவர்தான் இதனை நிவர்த்திக்கக்கூடியவரென்றும், இயேசுக்கிறிஸ்துவின் குணங்கள் மகாத்மா விடத்தில் நிறைந்துள்ளனவென்றும் சென்னையிற் பிரசுரமாகும் 'ஹிந்து' என்னும் பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார்.

இந்திய (புதிய) பிரதிகாவலர்.

இந்த மார்ச்சு௴ 15-ந்௳ இரவு இந்தியாவின் புதிய பிரதிகாவலராகிய லார்ட் ரீடிங்குக்கு லண்டனிலுள்ள நியாயதுரந்தரர்களும் மற்றுமுள்ளோரும் விருந்தளித்து உபசரித்தனர். விருந்துச்சபையில் அக்கிராசனம் வகித்தவர் லார்ட் ரீடிங்கின் இளம்பராய நிலையைப்பற்றிச் சொல்லும்பொழுது இற்றைக்கு 40 வருடங்கட்கு முன் கல்கத்தாவிலுள்ள ஹூக்ளி என்னும் நதியில் நின்ற ஒரு கப்பலிலுள்ள பித்தளைப் பொருட்களை மினுக்கும் வேலைபூண்ட ரூபஸ் என்னுஞ் சிறுவன் இந்த லார்ட்ரீடிங் என்று கூறினர். 40-வருடங்கட்கு முன் ஹூக்ளி நதியில் நின்ற கப்பலின் பித்தளைப் பொருட்களைத் துலக்கிய இவர் இப்பொழுது இந்திய பிரதிநிதிகாவலராயினர்! இதுபற்றியே "ஏழையா யிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ?" என்று பெரியோர் கூறியுள்ளனர். இவர் விசேஷ நீதிபதியாயிருந்தனர். இந்தியர் இவரிடத்திற் பல நன்மைகளை எதிர்பார்த்திருக்கின்றனர்.

லார்ட்ரீடிங் சொல்லியது.

"நான் நீதிபதியாகக் கடமை பார்த்த காலத்தில் மனிதர்களின் சுபாவத்தையும் இயற்கையையும் இயன்றவரையில் கவனித்து வந்துள்ளேன். இராச்சிய பரிபாலனத்திற் குரிய லட்சணங்கள் முழுதும் என்னிடத்தில் அமைந்துள்ளனவோ வென்பது சந்தேகம். ஆயினும் இந்தியாவைப் பரிபாலிக்குங் காலத்தில் நீதியையே கடைப்பிடித் தொழுகச் சித்தமா யிருக்கின்றேன். என்று பரிபாலன முடிவில் இந்தியா மேலான நிலையை அடைந்து திருப்தியோடிருத்தற்கான வழிகளை அனுசரித்தற்கு நான் ஆயத்தமாகவிருக்கின்றேன்."

தந்திச் சமாச்சாரத் திரட்டு.

துருக்கியர் சகாயம் பெறுதல்.

மார்ச்சு௴ 11௳

துருக்கிதேச விஷயத்தில் ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினர் பின்வருஞ் செயல்களைச் செய்திருக்கின்றனர்.

1. டார்டனலீஸ விசாரணைச்சபை விஷயத்திலும் பணவிஷயத்திலும் துருக்கியர்களுக்கும் நடத்துவதற்கான சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.
2. கலிப்பொலி தொடக்கம் ரூட்டாஸ்டோ வரைக்கும் நின்ற சைநியங்கள் அகற்றப்படும்.
3 ஐக்கிய தத்துவ ராஜாங்கத்தினரின் சைநியம் இரண்டு ஸ்தானங்களில் மாத்திரம் நிறுத்தப்படும். அவைகளிலொன்று ஐாருக் என்னுமிடமாகும்.
4 கொன்ஸ்தாந்திநோபிளுக்கெதிரிலுள்ள ஸ்குத்தேரி என்னுமிடத்திலே சிலபாகத்தி லின்றுஞ் சைநியம் அகற்றப்படும்.
5. குடிஸ்தான் என்னுமிடம் துருக்கியருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் அங்குள்ள கிறீஸ்தவரைத் துருக்கியர் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.
6. ஆர்மீனியாவிற்குத் தனியிஷ்டராச்சியமுறை உதவுதல்வேண்டு. சாதியசங்கத்தாராட்டிற்கு எல்லைவைத்துக் கொடுத்தல் வேண்டும்.
7. சாதியசங்கத்தில் துருக்கியருஞ் சேர்க்கப்படுவர்.
8. துருக்கியரைக் கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து துரத்துதற்கான நிபந்தனைகளெல்லாம் விலக்கப்படும்.

துருக்கியர் இவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்தால் இன்றேல் காலதாமசஞ்செய்தால் இந்தச் சகாயங்கள் செய்யப்படமாட்டா.

இந்திய பிரதிநிதிகள் இச்சகாயங்களைப்பற்றிக் கேள்வியுற்றபோது மிகவும் மகிழ்ந்தார்களென்றும், இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவாகவிருந்த ஆங்கில மந்திரியைப் புகழ்ந்தார்களென்றும் சொல்லப்படுகின்றது. பிரான்சியரும் சிலிஷியா என்னுமிடத்தைத் தாம் பரிபாலிப்பதை யொழித்து சில மாசங்களிற் துருக்கியர் வசம் அதனை ஒப்பிப்பார்களாம். சிமார்ணாவைச் சூழ்ந்த நாட்டையும் கிரேக்கர் துருக்கியர்வசம் கொடுப்பரெனச் சொல்லப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கைத்தொழிலாளர் சங்கத்தார் கனம் தேசாதிபதியைச்சந்தித்தமை.

முன்னமேசெய்தஒழுங்கின்படி 1921ம் ஆடு மார்ச்சு௴ 21௳ யாழ்ப்பாணம் கைத்தொழிலாளரின் பத்துப்பெயர் கனம் கவர்னரவர்களைப் போய்த் தரிசித்து கைத்தொழில் சம்பந்தமான மூவரிலொருவரைச் சட்டசபையிற் கைத்தொழிற் பிரதிநிதியாக நியமிக்கவேண்டுமென்று மனுப் பண்ணிக்கொண்டார்கள். அவர்கள் பெயர்வருமாறு:—ஸ்ரீ ம. சிவக்கொழுந்து(சுப்பிரீம்கோட்பிரக்கருங் கைத்தொழிலாளர் சங்கத்தலைவரும்) டெப்புத்தேஷன் தலைவர். ஸ்ரீ வ. மாரிமுத்தாச்சாரி, ஸ்ரீ சு. இராமுப்பத்தர், ஸ்ரீ ப. காசலிங்கப்பத்தர், ஸ்ரீ க. ஐயம்பிள்ளை, மெஸ் வ. நம்பியேல் ஸ்ரீ ப. கார்த்திகேயஆச்சாரி, ஸ்ரீ அ. வேலுப்பிள்ளை, ஸ்ரீ ச. விம்பலிங்கப்பத்தர், ஸ்ரீ க. சரவணைஆச்சாரி மனுப்பத்திரம் கம்மாளர், செவுகாரர், சாயவேலைக்காரர் முதலியகைத்தொழிலாளரிற் சுமார் 500கையொப்பம் கொண்டது. இப்பத்திரத்தின் கொப்பி எசண்டர் மூலமாக ஒருவாரத்துக்குமுன் அனுப்பப்பட்டது. பகல்2 மணிக்கு இராஸ்டு மோட்டர்காரில் டையார் டெப்புடேஷன் தலைவர்வீட்டிலிருந்து சென்றகுறிக்கப்பட்ட நேரத்துக்கு 20 நிமிஷத்துக்குமுன் சென்று கனம் கவர்னரது பிறைவேற் சகிறிட்டரி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு ஆசனங்களிலமர்ந்தபின் எஜண்டரும் கச்சேரிபிரதம துவிபாஷகர் ஸ்ரீ இராமலிங்க முதலியாரும் வந்தனர். 2மணிக்கு டையாரை கவர்னர் அவர்கள் உள் மண்டபத்துக்கழைத்து யாவரும் ஆசனத்தமர்ந்தபின் மனுப்பத்திரம் விசாரணைநடைபெற்றது.

கனம் கவர்னர். உமது தொழில் குன்றியதற்குக் காரணம் நீங்கள் ஜனங்களுக்குத் தேவையான பொருள் இன்னதெனவறிந்து அவற்றை இயற்றிக்கொடுக்கிறதில்லை. மேலும் உங்கள் பிள்ளைகளை ஆங்கிலேயக் கற்கைக்குப் பல தேசங்களுக்கு மனுப்புவதால் உங்கள் முன்னோரது வேலையைச் செய்யாதபடியால் தொழில் குன்றினது என்றார்.

ஸ்ரீ சிவக்கொழுந்து. கைத்தொழிலாளர் பெரும்பாலும் கல்வியில்லாதவர்கள் இவர்களுக்குத்தமது பூர்வீகசரித்திரந்தெரியாது தற்கால நிலைமைதெரியாது—இனிவரப்போகிறதுந்தெரியாது. அப்படிப்பட்ட நிலைமையிலிருப்பவர்கள் ஜனங்களுக்கு இன்னபொருள் தேவையென்றறிந்துகாமே அவற்றைச்செய்து தயமுயற்சி செய்வியலாதவர். ஆங்கிலம்கற்று உத்தியோகங்களுக்குச் செல்வோர் மிகச்சிலர்:—அநேகரும் கைத்தொழிலில் லாபமில்லாத காரணத்தாலேயே அதைவிட்டுவேறுவழிகளைத்தேடலானது.

கனம் கவர்னர்:—கைத்தொழிலாளரின்தொகை யாது?

எஜண்டர் அவர்கள்.—100—க்கு—10 அல்லது 20வீதம் வரலாம்.

ஸ்ரீசிவக்கொழு:- யான் ஜனக் கணிதைசிபுணனல்ல. ஆயினும்இந்தேசமுழுதும் கைத்தொழிலாளர் எந்தப்பட்டணம் கிராமமெல்லாம் பரந்து பெருந்தொகையாயிருக்கிறார்கள் என்றும் சிலவிடங்களில் கைத்தொழிலாளரே அதிகமாக விருக்கிறார்களென்றும் அறிவேன்.

கனம் கவர்னர்:—இலங்கையில் மற்றவிடங்களிலிருந்து மிவ்விதமனுச்செய்திருக்கிறார்களா?

ஸ்ரீசிவக்கொ:—சென்றவருடம் இதேமாதம் தேதியில் கொழும்புநகரத்திற்கூட்டமொன்றுகூடிச்செய்துகொண்ட தீர்மானக்காரணமாக ஒரு மனுப்பத்திரம் அனுப்பப்பட்டது. அதன்கொப்பி இத்தமனுவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கனம் கவர்னர்:—ஆம் இதுபடித்தருப்பாகிருக்கிறது. நீங்கள் உங்கள்மாகாணத்தில்தெரிவு செய்யப்படும்பிரதிநிதிமூலமாக உங்கள்குறைகளையுந்தெரிவித்துப் பரிகரிப்புப் பெறத்தடையுண்டா?

ஸ்ரீமாரிமுத்துஆச்சாரி:—தெரிவுசெய்யப்படுங் கனவான்கள் கைத்தொழில் விஷயமாய் முழுமுயற்சிசெய்துஉழைப்பதில்லை. ஆகையால் கைத்தொழில் சம்பந்தமான ஒருவரையேநியமித்தால் மிகநன்மையுண்டு இவ்வண்ணமே இம்மூவரிலொருவரை நியமிக்கும்படிகேட்கிறோம்.

கனம் கவர்னர்:—உங்கள்குறைகளை எஜண்டுத்துரையிடம் அறிவித்துப்பரிகரிப்புப்பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸ்ரீமாரிமுத்துஆச்சாரி:—நாம் கல்வியில்லாதவராகையால் எஜன்றத்துரையிடம்மனுப்பத்திரம் அனுப்புவது வழக்கம்:—அவற்றைத்தலைமைக்காரரும் மற்றையோருந்தமது மிக்ககருணையில்லாதவர்களாகையால் அம்மனுப்பத்திரம் மூலமாய்நமக்குச்சிலாக்கியம் கிடைக்காமற்போவது வழக்காயிருக்கிறது.

கனம் கவர்னர்:—உங்கள்கேள்விக்குப்போதிய பெலப்பில்லாமலிருக்கிறது:—மேலும் சென்றவருடம்மனுவைப்பார்த்ததிலும் நமது அபிப்பிராயம் மாறவில்லை. ஆயினும் ஒன்றுசொல்லுகின்றேன் உமது சகலகுறைகளையும் உங்கள் தலைவர் மிஸ்டர் சிவக்கொழுந்துமூலமாக எனக்குநேரே அறிவித்தீர்களில் அவைகவனிக்கப்படும். என்பதை அறியுங்கள்.

ஸ்ரீசிவக்கொழுந்து:—டெப்புடேஷனை அன்போடு அங்கீகரித்துத் தாங்கள் செய்தஉபகாரத்துக்கு நன்றிசெலுத்தலுடன்ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். மனுப்பத்திரத்தின் பிரதானமான காரணங்களுக்குச் சார்பாகப் போதியதான வேறுபல்தரப்பியாயங்களையும் காரியங்களையும் இன்னும் ஒருமுறை காட்டஇடந்தரக் கோருகிறோம்.

கடித.

கடிதம்.

மதுபானத்தை மட்டாக அருந்தினுல் பாவம் எய்தமாட்டாதா?

கனமானிய ஆன்றோர்களே!

சில நவீன சமயிகள் மதுபானத்தை அளவுக்கு மிஞ்சிச் செய்தலே பாவமென்றும், மட்டாக அருந்தினுல் பாவமில்லையென்றும் கூறுகின்றார்கள். அந்த நியாயங் கொண்டு அம்மதுபானத்தைக் கடவுள் வணக்கத்துக்குரிய பரிசுத்தமான பொருள்களில் ஒன்றாகவும் வைத்துப் பாவித்து வருகின்றார்கள். அங்ஙனம் இவர்கள் கூறும் மாற்றம் மேதாவியர்களால் அங்கீகரிக்கத் தக்கனவோ என்பதைச் சிறிது பரிசோதிப்பாம். பாவங்களுக்கெல்லாம் குரு பீடமாயுள்ள மதுபானத்தை மட்டாகப் பாவிக்கலாமென்றால், "கொலை களவு காமம் பொய்' என்னும் ஏனைய நான்கு பாதகங்களையும் மட்டாகச்செய்யலாம்காணே? ஒன்றுமின்றிக் கடுமுறையாக உழுது புரட்டிக் கொண்டுவிடினும் பயிரிக்குச் சிறிய கொழுவைக் கொண்டுதால் சும்மாயிருக்குமா? சுகவீனத்தி பிணிப்புண்டிருக்கும்போதே அளவற்ற சேட்டைகளைச் செய்யும் குரங்கின் வட்டைக் கொஞ்சம் தெறித்துவிட்டால், அது புரியுந் திருக்கூத்தை வாயாலே இயம்ப முடியுமா? ஒருமுறை பரபுருஷனோடு கலந்த பெண்ணை எத்தனைய காவலுள் வைத்திருந்தாலும் கட்டுப்பட்டிருப்பாளா? தொடக்கத்திலே சிறு பிள்ளைகளுடைய அற்ப மலத்தைத் தின்று பழகின குலவி, பின்னர் தேசமெல்லாம்போய்த் தொல்லைப் புறத்தைச் சுத்தமாக்கிவிடுகின்றதே? மரணபரியந்தம் மதுவை செய்வதில்லையென்று சத்தியஞ்செய்து பிரமசாரிவிரதம் பூண்ட துறவிகளும், ஒருமுறை ருசி கண்டுவிட்டால், புலி மான்கறிய ருசித்துப் பலவரைக் கண்டவனைப்போல, வனப்புள்ள மங்கையரைக் கண்டு வாயூறுகின்றார்களே! எத்தனையோ பேர் மோசகுட்டிக்கு நோசுட்டிக் குடிக்கத்தொடங்கிப் பின்னர் பெரிய குடிகாரராய்ப் போய்விட்டார்கள். இடம் பொருள் ஏவல் முதலிய அட்ட ஐஸ்வரியங்களையும் படைத்தவர்களில் அநேகர், காது புத்தியும், சரீரவலிமையும் உண்டாகுமென்று கருதிச் சம்பையின், உவைன், பிறண்டி முதலிய உயர்ந்த குடிவகைகளை, பலன் கணக்காக வைத்தி அநுமானிபின் நிவர்த்தி வைத்துதகொண்டு சாப்பிடப்போவதற்கு முன்னே தாமும் மனைவிகளுமாகச் சிறு கிளாசில் வார்த்து மட்டாகப் பாவித்து வந்து, காலடைவில் பெரிய குடிகாரராய்ப் பொருள் பண்டம் எல்லாத்தையும் விற்றுக் குடித்துவிட்டு நீங்காத நல்குரவெய்தி அலைகின்றார்கள். மனிதர் தொடக்கத்தில் எச்சப் பாவத்தையும் அச்சத்தோடும் நாணத்தோடும் அந்தரங்கத்தில் மட்டாகவே செய்ய ஆரம்பித்து, பின்னர் காலடைவில் கரைகெவிந்து பகிரங்கமாகச் செய்யத் துணிந்துவிடுகின்றார்கள் திட்டமே ஒருதினம் முகாலோபனஞ் செய்தாலும் தீமை பெய்து மென்பது சரதம். மதுபானம் மனிதரைத் துன்மார்க்கத்தில் நடத்தும் கஸ்துவல்லவென்று இவர்கள் மார்பிலே கையை வைத்து மனசாட்சியோடு சொல்லுவார்களா? மனிதன் மதுபானத்தை உட்கொள்ளுதல், அக்கினிக் குவியல் கூட்டிலுள்ளே குரங்கு நுழைந்ததுபோலிருக்குமன்றோ? மந்திரிமாருக்குள்ளே மிக்க மதியுடையரெனக் கீர்த்தி வாய்ந்த "சுக்கிராச்சாரி"என்பவர் இக்கொடிய மதுபானத்தைச் செய்யப் பழகியமையாலன்றோ, தனது வயிற கிழியப்பெற்ற மான மிழந்து வையத்தோரால் இகழப்பெற்றனர். விவிலியநூலில் பழைய ஏற்பாட்டிலே சொல்லப்பட்ட "லோத்து" என்பவர் கொடிய பாவங்களை விளைவிக்கும் உவைனைப் பருகியதாலன்றோ, தான் பெற்ற புத்திரிகள் இருவருக்கும் கருப்பதானஞ் செய்துவிட்டார். ஐயையோ! இந்தச் சண்டாளத்தன்மை பொருந்திய உவைன் முதலிய மதுபானங்களை மட்டாகப் பாவிக்கலாமென்று சொல்லுகிறார்களே! அங்ஙனம் கூறுவதோடமையாது, அதைத் தேவவழிபாட்டுக்குரிய பரிசுத்தமான பொருட்களுள் ஒன்றாக வைத்துக் குழுமியிருந்து பருகின்றார்கள்! அந்த வசை கொடிய உவைனைத் திருவிருந்தில் மட்டாகப் பாவித்துப் பழகிய ஒருவன் காலடைவில் பெரிய குடிகாரனாகி மதிமயங்கிச் செய்வது தவிர்வது தெரியாமல், பலவகைப்பட்ட மகா பாதகங்களைச் செய்து இறப்பானாயின், நியாயத்தீர்ப்புநாளில் கடவுள் சமுகம் அகலத்தில் இவர்ந்து வந்து அவனை எழுப்பிக் குற்றவாளியாக நோக்கி மதுபானமயக்கத்தால் எண்ணற்ற பாவங்களைச் செய்த அடா துட்டா! எனக்கு இடப்பக்கத்திலுள்ள பாவிகளுடையகிடையிலே நீபோய் நிற்கக்கடவாய் என்று கட்டளையிடுவாராயின், அவன் அவரை மிகவும் தாழ்மையோடும் பார்த்து இரக்கம் நிறைந்த பரமபிதாவே! தேவரீர் மனிதரை இரட்சிப்பதற்காக நிலவுலகத்தில் மானிடசட்டைதாங்கித் திருவவதாரஞ்செய்து வையகத்தில், தேவரீர் செய்த அற்புதங்களுள் முதல் அற்புதமாக ஓர் கலியாணவீட்டில் ஏராளமாக உண்டாக்கிக் கொடுத்த உவைனை அடியேன் குடித்துவிட்டு சகிபேதம் பாராமலும் முறைதலைபிறழாமலும் 'லோத்தைப்போல' விபசாரம் முதலிய அநேக பாவங்களைச் செய்வது உண்மைதான், அதற்கு அடியேன் பாத்திரவாளியல்ல, தேவரீரே அதற்குக் காரணகர்த்தா என்பானுயின், அதற்கு என்ன விடையிறுப்பார்? நமர் மனச்சாட்சியுள்ள நடுவுநிலைமையோடாதவராதவனும் உடனே தான் செய்தது குற்றந்தானென்று ஒத்துக்கொண்டு, அவனை வைப்பகத்திலே நிரந்தரவாளரோடு பிடித்துவிடுவாரன்றோ? உவைன் முதலிய வெறிப்பதார்த்தங்களை அருந்திவிட்டுக் கொடிய பாதகங்களைப் புரியும் குடிகாரரே! இந்தக் குற்றக்கேள்வியை ஒவ்வொருவரும் மனனம் பண்ணிக்கொள்ளுங்கள்! குடிவகைவடித்துக் கொடுக்கும் ஒரு நியாயாதிபதி, அக்குடிவகையைப் பாவித்துவிட்டுக் கண்டவரோடுஞ் சண்டையிட்டுத் துட்டத்தனஞ் செய்பவனைத் தண்டிக்க நியாயம் இடங் கொடுக்குமா? ஆதலால் மதுபானத்தை மட்டாகப் பாவிக்கலாம் என்று கூறும் நவீனசமயிகளுடைய கொள்கை கருதி யுக்தி அநுபவங்கட்கு ஒத்ததல்ல. நஞ்சானது தன்னை யருந்தியவனை அன்றைக்கே கொன்றுவிடுகின்றது. இக்கஉவைன் முதலிய மதுபானம் என்னும் நஞ்சுகளோ தம்மை அருந்தினவர்களை மரணபரியந்தஞ் சித்திரவதைசெய்து கொல்லுகின்றன.

அன்பர்களே! எம்மால்மேலேகாட்டப்பட்ட நியாயங்களை சித்தசமாதானத்தோடு ஆராய்ந்து பாருங்கள். மண் பெண் பொன் முதலியநிலையற்ற இம்மைச்சுகங்களை இச்சித்துமார்க்கத்தைக்கைவிட்டமாரன்களுடைய சற்புத்திரர்தைகட்குச் செவிசாயாது,உவைன்முதல் கள்ளுவரையிலுள்ள வெறிப்பதார்த்தங்களைக் கனவிலுங்காடாது, பால் மோர் சர்பத்து முதலியஉயர்ந்தபானங்களை அளவாதமுந் அருந்திச்சன்மார்க்க நெறியிலே யொழுகக்கடவீர்கள்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

சிவலீலாமிர்த தரங்கிணி.

தரங்கம்—உ.

வெள்ளையானைச் சாபந்தீர்த்தபடலம்.

பிறவித் துன்பத்தைப் போக்குவதாகிய காசி க்ஷேத்திரத்தில், வேதங்களை யுணர்ந்த துர்வாச முனிவர் காமேஸ்வரரென்னும் பெயரினையுடைய சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்துத் துதிப்பாராயினர்.

அப்பொழுது பரமேஸ்வரன் தமது திருமுடி மீதுள்ள கமலமலரொன்றை விழச்செய்ய, முனிவர் தமதிருகரகமலமும் விரித்துத் தாங்கித் தமது நேத்திரம், சிரம், மார்புகளில் முறையே ஒற்றி மகிழ்ச்சி மேற்பட அணிந்துகொண்டு தேவலோகஞ் சென்றனர். அப்பொழுது இந்திரன் சத்துருக்களைத் தானவரைக் கொன்று வெற்றிமாலைசூடிச் சேனைகளுந் தேவரும் போற்றிசைக்கவும், வாத்தியமொலிக்கவும், தேவமகளிர் கீதஞ் செவியை நிறைக்கவும் வெண்கொற்றக் குடை நிழல் செய்யவும், மதநீரைப் பொழிகின்ற வெள்ளையானைமேல் உலாவந்தனன்.

அப்பொழுது தேவர்கள் தத்தமக்கேற்ற கையுறைகளைக் கொடுத்து இந்திரனை உபசரிக்கக் கண்ட துர்வாசமுனிவர் தாம் கொணர்ந்த தாமரைமலரை இந்திரனுக்குக் கொடுத்தருள, அவன் தனது செல்வச் செருக்கால் அப்பிரசாதத்தை ஒருவகைச்சட்டை பண்ணி மதயானைமேல் வைத்தனன். உடனே அய்யானை தாமரைமலரைக் கீழேதள்ளிக் காலினாலே தேய்க்கக்கண்ட துர்வாசமுனிவர், கடுங்கோபங்கொண்டு, பொங்கி, உருத்திர மூர்த்தி போல நின்று கூறுகின்றார், "நித்தியமாகிய முத்திச் செல்வம் பெற்ற மெய்யன்பர் உளத்தொழுந்த அநித்தியமாகிய செல்வத்தருக்கினையுடையாய்! நீ என்ன காரியஞ் செய்தனை, அறிவிலாதவனே, மகாதேவர் திருமுடியிற் சாத்திய மகாப்பிரசாதத்தைப் பேணாது யானை மிதித்துச் சிதறும்படி அதன்மேல் வைத்தாய்; தேவர்கள் தொழுகாலும் உன் போலிச் செல்வமும் சிவபிரானை அருச்சித்ததனாலாய பயனென்று நீ உணர்ந்திலை, இந்திரனே! உன்றலை பாண்டியர்களில் ஒரு மகா வீரனது வளையினாலே சிதறக்கடவது. உனது வலிய வெள்ளையானையும் காட்டானையாகக்கடவது" என்று கொடிய சாபமிட்டார். உடனே தேவர்கள், துர்வாச முனிவரது பாதாம்புயங்களில் வீழ்ந்து தங்களரசனது குறையைக் கூறி இரந்து, "இந்திரிய நிக்கிரகஞ் செய்த மகா முனிவரே, எங்களரசனும் ஐராவதயானையும் பிழையிழைத்தலால், நீர் சபித்தீர். ஆயினும் இப்பொழுதே இச் சாபத்தை ஒழித்துவிட வேண்டுமென வேண்டினர். அத்துர்வாசமுனிவர் மனமிரங்கி கருணைகொண்டு, "தேவர்காள்! சிவபிரானது பிரசாத நிந்தனை வேறு பரிகாரத்தால் நீங்காது, ஆகையால் தலைவனாக வந்தது மகுடத்தினளவாக ஆகக்கடவது. வெள்ளையானை காட்டானையாகி நூறு வருடஞ் சென்றபின் தேவயானையாகக்கடவது" என்றார்.

சாபம்பெற்ற வெள்ளையானை தேவலோகம் விட்டுத் தெய்வ அறிவொழிந்த காட்டானைக் கூட்டத்தோடு கூடி, செங்கண் மறவர் தங்கும் பாலைநிலத்தும், முல்லைநிலத்தும், குறவர் தங்கும் குறிஞ்சி நிலத்தும் சஞ்சரித்து நூறு வருடங் கழியச் சோலைகளாற் சூழப்பட்ட சிறந்த மதுரையாகிய கடம்பவனத்தை அடைந்தது.

அடைந்த அக் கரிய யானை, சிவபிரான் திருவருள் பெறுதற்குரிய சமயஞ் சார்தலால், மரகதம்போல இலைகள் தழைத்து, மின் போல் விளங்கிய பொற்றாமரை வாவியைக் கண்டது. அதனைக் கண்டவளவிலே தெய்வ அறிவும், அவ் வாவியில் மூழ்கியவளவிலே பழைய வெள்ளை வடிவமும் விளங்க, ஒப்பற்ற பரமானந்தமே திருவுருவாகக்கொண்ட சொக்கலிங்க மூர்த்தி தனக்கெதிரே தரிசனமாக அவரைக் கண்டு, அருச்சிக்க விரும்பித் துதிக்கையினுற் றூய திருமஞ்சன நீர்த்தமுகந்து அபிடேகித்துத் தேனுமுகத் திருப்பள்ளித்தாமஞ் சாத்தி அப் பெருமானைப் பூசித்தது. தவ வைராக்கியத்தின் தன்மையை யுணர்ந்த சிவபிரான் அதனை நோக்கி ஐராவதமே; நீ இங்கு வந்த காரணம்யாது, விரும்பிய வரம்யாது, கூறுவாய் என்றார். அதனைக்கேட்ட யானை தனது வரலாற்றைக் கூறி, 'ஐயனே! தேவரீரை யடையப் பெற்ற அடியேனுக்கு இனி ஒரு குறையுமில்லை, எந்தையே! அடியேனும் தேவரீரைப் பிரியாது இவ் யானைகள் எட்டோடும் ஒன்பதாய் உமது சந்நிதியில் இவ் விமானத்தை முதுகிற் சுமத்தல் வேண்டுமென்று ஒப்பற்ற அன்புடையதாயோ ரெண்ணம் என மனத்துத் தோன்றலால் அச் சமயத்திலேயே அருள வேண்டும்,' என்றது.

நீகாசகன்புள்ள யானை இவ்வாறு விண்ணப்பஞ் செய்ய, சிவபிரான் "அன்பு பூண்ட ஐராவதமே, எனது மெய்யன்பன் இந்திரனை நீ தாங்கியிருப்பதே நமக்கு வேண்டிய பணியாகும்" என்று பின்னும் வரமருளி விடை கொடுத்தருளினர். அங்ஙனம் விடை பெற்ற யானை மேலைத்திசை சேர்ந்து தன் பெயரால் தடாகமும், அதன் கரையிலே சிவலிங்கமும், விநாயகக்கடவுளும் பிரதிட்டை செய்து இருக்கும்பொழுது இச் செய்திகளை யுணர்ந்த இந்திரன் ஏவலாளரை அழைத்து, "எமது யானையைக் கொண்டு வாருங்கள்" என்றனுப்பினன்.

அவர்களும் விரைந்து வந்தழைக்க அதுவும், 'யான் வருகிலன், நீவிர் முன்பு விண்ணுலகத்துக்குப் போங்கள்' என்றனுப்பியபின் யானை எழுந்து கிழக்குத்திசை சேர்ந்து தன் பெயரால் ஓரூருண்டாக்கி, இந்திரேஸ்வரரென்று தன் றலைவன் பெயரால் ஒரு சிவலிங்கப்பிரதிட்டை செய்து சிவபிரானைப் பூசித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது இந்திரன் யானை வாராக் காரணத்திலுற் பின்னும் தூதரை அனுப்ப, அவ் யானையுந் தேவலோகஞ் சேர்ந்து இந்திரனை வணங்கித் தனது கொடிய சாபம் சுந்தரேஸ்வரராற் றீர்ந்ததைக் கூறி அங்கே இருந்தது.

இங்ஙனம்
K. செல்லம்மாள்,
ஸ்ரீ ராமநாத வித்தியாலயம்,

அநுவாதம்.

நெடுவாழ்வெய்து முறை.

அனேக ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ காசியில் அரசர் மரபிற் பிறந்த அந்தணரொருவரிருந்தார். அவரது பெயர் தர்மபாலன். அவருக்கு ஒரு மகனிருந்தான். அவன் பெயரும் தர்மபாலன்.

இளவரசான தர்மபாலனுக்கு யுக்த வயது வந்தவுடன் அவனது தந்தை அவனை அந்நாளில் கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியோர்க்கு உறைவிடமானதென்று பெயர் பெற்றிருந்த தேசலைநகரத்திற் கனுப்பி, அங்குள்ள ஒரு பெரிய ஆசிரியரிடம் கல்வி கற்கும்படி நியமித்தார். குழந்தையான தர்மபாலன் இவ்வாறிருந்து வருகையில், ஆசிரியரின் மூத்த பிள்ளை நோயுற்று இறந்தான். அப்போது அவனுடலை விதிப்படி தீயிட்டுக் கொளுத்த நிமித்தம் ஆசிரியர் காட்டுக்குச் செல்லுகையில், தர்மபாலனை யொழித்த மற்றைப் பிறரெல்லாம், அவரைப் பின் றொடர்ந்து சென்றனர். தர்மபாலன் மாத்திரம் ஆசிரியரின் வீட்டிலேயே இருந்துவிட்டான்.

காட்டிலிருந்து திரும்பி வந்தபின் பிறரெல்லாம் ஆசிரியரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு அவருக்கு விளைந்த துன்பத்திற்கு வருந்தி "நல்லொழுக்கமெல்லாம் நிறைந்த சிறுவன் தன் தந்தை தாயர் மனம் வருந்த இளமையில் இறந்தது மிகவும் வருந்தத்தக்க"தென்று சொல்லி அவரைத் தேற்றினர்.

அப்போது தர்மபாலன் மட்டும் "என் நண்பர்களே! நீங்கள் நமது ஆசிரியரின் பிள்ளை இறந்ததற்கு வருந்துகின்றீர்கள். இது பெரிய கஷ்டந்தான். ஆயினும் மனிதர், இளமையில் இறப்பது ஒருபொழுதும் முறையல்லவென்று சொன்னான்.

இதைக்கேட்ட மற்றையோர் வியந்து "என்னே நீ இவ்வாறு இயம்புவது? "பாரிற் பிறந்தன யாவும், பாழுக்கிரை"யென நமதாசிரியர் இடித்துக் கூறும் மொழியை நின் செவியேறவில்லைபோலும்" என்று மறுமொழி யியம்பினர்.

அப்பொழுது தர்மபாலன் "நீவிர் உரைப்பது மெய்யே; பிறப்பன யாவும் இறப்பனவே ஆயினும் மனிதர் மூப்பெய்திய பின் உயிர் நீத்தலே முறையன்றி இளமையில் இறப்பது ஒருபோதும் முறையன்று என்று உரைத்தான்.

இதைக் கேட்ட மற்றைப் பிள்ளைகள் "உன் வீட்டாரொருவரும் இளமையில் இறப்பதில்லையோ?" என்று திரும்பி வினவ,

தருமபாலனுஞ் சிறிதும் தடையின்றி, 'இல்லவேயில்லை. என் வீட்டார் பழுத்த கிழவரான பின்புதான் உயிர் நீப்பது. இது எங்களது குடிவழக்கு" என்று பதில் சொன்னான்.

இதைச் செவியுற்ற பிள்ளைகள் வியந்து, இச் செய்தியைத் தம் ஆசிரியரிடந் தெரிவிக்க, அவர் தர்மபாலனைத் தன்னருகிற் றருவித்து, "இவர்கள் வியப்புறுவது மெய்தானா? உன் குடியில் இளைஞர் ஒருவரும் உயிர் நீப்பதில்லையா? என்று வினவினார்.

இது "மெய்தான்" என்று தர்மபாலன் பதிலுரைத்தான்.

இதைச் செவியுற்ற ஆசிரியர் முன்னினும் மிக்க வியப்புற்றவராய் "இது விந்தையினும் விந்தையே. நான் இச் சிறுவனது தந்தையிடஞ் சென்று இச்செய்தியின் உண்மையை அறிவேன். அவரும் இது உண்மையே என்றியம்புவரேல் அவரொழுகு நெறியை அறிந்து அதைப் பின்பற்றுவேன்" என்று நிர்மானித்தார்.

தாம் நிர்மானித்தபடியே ஐந்து நாட் கழிந்தபின் இவர் ஒரு ஆட்டின் எலும்புகளடங்கிய ஒரு மூட்டையை ஒரு ஆளின் தலையின் மேல் வைத்துக்கொண்டு காசியை நோக்கிப் புறப்பட்டார். தர்மபாலனது அரண்மனை வந்து சேர்ந்ததும் அரசன் அவரை அன்புடனேற்று உண்டியளித்துச் சுகிப்பித்தான். உணவருந்தியபின் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு ஆசனத்தில் உட்கார்ந்தவராய் ஆசிரியர் அரசனை விளித்து "ஐய அந்தணரே! நான் தங்களுக்குக் கொண்டுவந்திருக்கும் செய்தி, தங்களைத் துன்பக்கடலில் ஆழ்த்துமே! அதை எவ்வாறுரைப்பேன்? கல்வி கேள்வி நல்லொழுக்கமுமிற் சிறந்து, மூன்று மறைகளையும் ஐயந்திரிபறக் கற்ற தங்களது இளங் குழந்தையான தர்மபாலன் உயிர்நீத்தான். தாங்கள் அறிவிற் சிறந்தவராதலின் இதை ஒரு பொருட்டாக மதியாமல் மனதைத் தேற்றிக் கொள்ளவேண்டும். தங்களுக்குத் தெரியாத நூதன விஷயங்களைச் சொல்ல நான் அசக்தன். பிறப்பன வெல்லாம் இறப்பனவென்றன்றோ நமது பெரியோர்கள் முறையிடுகின்றனர்" என்றார்.

இதைச் செவியுற்றதும் அரசன் நகைத்து, "என் மகன் இறக்கவில்லை. அவன் உயிருடன் இருக்கின்றான் என்பது நிச்சயம். வேறு யாரோ மரித்திருக்கவேண்டு"மென்று பதிலுரைத்தான்.

ஆசிரியரும் மனந் தளராமல் "வாஸ்தவமாகவே உமது பாலன் தர்மபாலனே இறந்தனன். இதோ அவனது எலும்புகள்" என்று தான் கொண்டுவந்த எலும்பு மூட்டையைக் காட்டினார். பின்னும் மனந் தளராதவனாய் அரசன் "ஒரு ஆடோ நாயோ செத்துப்போயிற்றென்று தோன்றுகிறது. அதன் எலும்பைக் கொண்டு வந்து எனது மகனது எலும்பென்று சொல்லுகிறீர். என் மகன் ஒருக்காலும் இறவான். எழுதலைமுறையாக எனது வம்சத்தில் இளைஞர் ஒருவரும் இறந்ததில்லை" என்றான்.

ஆசிரியரும் அரசனை இனிப் பரிசோதனை செய்வது வீணென்று அறிந்து அவனது காலில் விழுந்து "ஐய, பிராமணோத்தமரே உமது தர்மம் யாது? நீங்கள் என்னென்ன விரதங்களை அனுஷ்டிக்கின்றீர்கள்? இவ்வளவு திடமான புத்தியையும் மகத்துவத்தையும் தங்களுக்கு அளிக்கும் ரகசிய நெறி எவை? தயவுசெய்து நான் கன் அவைகளை எனக்குக் கற்பிக்கவேண்டும். 'குழந்தைகளின் ஆயுளைக் காப்பாற்றும் நெறியல்லவோ ஸத்தியமான நெறி" என்றார்.

அரசனும் பின் வருமாறு மறுமொழி யுரைத்தான்.

1. ஸதாதர்மமென்னும் நன்னெறியிலேயே நாங்கள் ஸதா ஒழுகுகின்றோம். மறந்தும் பொய் சொல்லோம்; மறந்தும் மறஞ்செய்யோம்; ஞான விருத்தமான செய்கைகளை அறவே ஒழித்துவிடுகிறோம்.

2. ஸத் குருக்களின் உபதேசங்களைத்தான் நாங்கள் ஸதா சிரவணஞ் செய்கின்றோம். தீயோரது யோசனைகளுக்குத் திரணமும் செவி சாய்க்கோம். தீயாரைத் தவிர்த்து ஸதா ஸத் புருஷரின் ஸங்கமே செய்வோரா யிருக்கிறோம்.

3. ஏழைகளுக் கன்ன மிடுவதில் எங்களுக்கு ஆஸக்தி ஜாஸ்தி. இதனால் எங்களுக்குண்டாகும் ஸந்தோஷத்திற் களவேயில்லை. அந்த தானங்களை நினைக்கும்பொழுதெல்லாம், எங்களுள்ளம் குளிர்ந்து அளவில்லாத ஆனந்த முண்டாகின்றது.

4. "மஹரிஷிகளும், பிராமணோத்தமர்களும், அநாதைகளும், வழி நடந்து வாடும் யாத்திரிகரும், நன்னெறியி லொழுகும் வறியவரும், அறத்திடு பிச்சை கூவி யிரக்கும் அரத்தருமே எங்களது அதிதிகள்.

5. நாங்கள் காமத்தை முழுமையும் வென்றவர்கள். ஸாத்விகரான எங்களது பிரிய பார்யைகளைத் தவிர வேறு ஸ்திரீகளை நாங்கள் சிந்தித்தும் பார்ப்பதில்லை. அவர்களும் பதிவிரதோத்தமைகள். தங்களது அருமைக் கணவர் தவிர வேறு புருஷரைக் கனவிலுங் கண்டவரல்லர்.

6. இவ்வுத்தமிகளின் கர்ப்பங்களி லிருந்து, ஸத்புத்தியும் அதிஞானமு முள்ள ஸந்ததிகள் எங்களுக் குண்டாகின்றன. கற்றது மறவாமை எங்களது குழந்தைகளின் விசேஷகுணங்களி லொன்று. வேத வேதாந்தங்களைக் கற்பதில் அவர்கள் அதியுத்ஸாக முடையவர்கள்.

7. எங்களது உற்றுறவினரும் இவ்வாறே நன்னெறியி லொழுகுகின்றனர். தாய், பிள்ளை, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, ஸ்திரீ, புருஷன் ஆகிய யாவரும் ஒழுக்கத்தில் ஒருவரை மற்றவர் மிஞ்சவேண்டுமென்று ஸதா கண்ணா யிருப்பவர்.

8. இதுமட்டோ, எங்களது வேலையாட்களும் இந்நெறியி லொழுகுபவரே! வாயில் காப்போனும், வீடு பெருக்குவோனும், ஒவ்வொருவனும் தன் தன் நிலைமைக்குத் தக்கபடி இந்நன்னெறியிலேயே யொழுகுகின்றான். இக்காரணங்களாற்றான் எங்களது ஸந்ததிகள் இளமையில் இறப்பதில்லை.

9. நன்னெறியே நல்லோரைக் காக்கும். கஷ்டமுந் துக்கமும் அவரையணுகா. அவன் முகவொளியினாலேயே அவன் நித்திய சந்தோஷத்துட னிருக்கிறானென்று விளங்கும். இதற்கெல்லாங் காரணம் நல்லொழுக்கந் தவிர வேறொன்றுமின்று.

—பூர்ணசந்திரோதயம்.

விளம்பரம்.

மேல்நாட்டுத் தேயிலைத்தோட்டப் பங்குகள்வாங்குகிறதற்கு இது தருந்த தருணம் தவறுதீர்கள்.

நயம். நயம்.

150 இல்வுட்டிகம்பெனி பங்குகள், ஒவ்வொரு பங்கு பத்துருபாய் வீதம் முழுப்பணம் கட்டி வாங்கின பங்குகளுக்கு இப்போது என்ன விலை கொடுத்துவாங்கக்கூடும். வாங்கப்பிரியமுள்ளவர்கள் மொத்தமாக அல்லது 5 பங்குகளுக்கு மேல் எவ்வளவும் வாங்கக்கூடும்.

தற்சமயம் கொழும்பு மார்க்கட்டில் மேல்நாட்டுத்தேயிலைக்கு விலை வர வர ஏற்றம்.

தருணம் தவறுதீர்.

C. Arianayagam,
St. Andrews,
M 9. MASKELIYA.

மெடிக்கல் டிப்பாட் மெண்டைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

G. 87.

ராகமம், கந்தானை, அவிசாவலை, களுத்துறை, பிடபுனை, இங்கிரியா, மொறட்டுவை, ரேபவடை, நீர்கொழும்பு, பாணந்துறை, வத்துப்பிட்டிவலை, என்னுமிடங்களிலுள்ள ஆசுப்பத்திரிகளுக்குத் தேவையான தின்சாமான்களைக் கொடுக்கிறதற்கு ஒப்பந்தம்பண்ண விரும்புவோர் சீல்வைக்க கடுதாசிகள் அனுப்பலாம். ஒப்பந்தம் நிகழும் காலம் 1921ம் ஆ ஐப்பசி மீ 1உ தொடக்கம் ஒருவருஷத்துக்கு.

பிரதான சிவில் மெடிக்கலாபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம் கடுதாசியிலே பேர்கள் எழுதப்படவேண்டும். சீல்விக்கடுதாசிகள் ஒப்பந்தவிசாரணைத் தலைவரின கந்தோருக்கு 1921ம் ஆ சித்திரை மீ 19உ மத்தியானம் 12 மணிக்குமுன் அனுப்பப்படவேண்டும். சேர்த்துக் குப்பிவைக்கப்படாத சீல்விக் கடுதாசிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்றும் விளம்பரங்கள் அரசாட்சியாரின் கசற்றுப்பத்திரிகையிற் பார்த்துக்கொள்ளலாம்! அல்லது பிரதான சிவில் மெடிக்கலாபீசரிடம் கேட்டறிந்து கொள்ளலாம்.

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ரூ. ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	க0
இரண்டாம் பாலபாடம்(சித்திரசகிதமானது)	க௫
மூன்றாம் பாலபாடம்	உ0
நான்காம் பாலபாடம்	௩0
ஐந்தாம் பாலபாடம்	௪0
ஆறாம் பாலபாடம்	௬0
கலாமஞ்சரி [விளக்கத்துடன்] (இது எட்டாம் வகுப்பிலும்,"ஆங்கிலஸ்கூல் லீவிங்சேர்ட்டிவிக்கற்"வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது)...	எ௫
கலாமஞ்சரிவிளக்கம் (மாத்திரம்)	௩.0
நமச்சிவாயமாலை, உரையுடன்	௸
வெற்றிவேற்கையுரை	௸
வாக்குண்டாமுரை....	௸
நல்வழியுரை	௸
நன்னெறியுரை	௸
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)	க௨
இலக்கண வினாவிடை...	க0
நிகண்டு கஉ-வதும கஉ-வதும்	உ௫
திருவாதவூரடிகள்புராண மூலம்	உ௫
திருச்செந்தூர்ப்புராணவுரை (இலேஸ்காகிதம்) ரூ.க-உ௫,(தங்காகிதம்)	க-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் ...	க0
கந்தசஷ்டி கவசம்	௸
சுப்பிரமணியசுவாமி விருத்தம்	௸
ஆறுமுகசுவாமி விருத்தம	௸
பிள்ளையார்கதை	க௨
கதிரைமலைப் பேரின்பக்காதல்	க௨
பிரபஞ்சப் பெருவழக்கு	க0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ...	க0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) ...	௸
குமணசரித்திரம் ,, ...	௸
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௸
சோமவாரவிரதமான்மியம்	க0
சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ... ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது எட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது ...	க௫

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்தகழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை கிரயமின்றிக் கொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்டல் ஆடரேனும் மனிஓடரேனும் அனுப்புதல் வேண்டும். சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

சமரச போதினி.

இஃதொரு தமிழ் வாரப் பத்திரிகை. தஞ்சைமா நகரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுய ஆட்சி பெறுவதற்கு நியாயக் கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம். இந்தியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது இதன் முதல் விரதம். கிராமவாசிகளின் குறைகளை நீக்கிக் கிராமத்தைச் சீர்திருத்தும்படி செய்வதும் அதற்கு வழிகளைக் காண்பிப்பதும் இதன் வேலை. இப்பத்திரிகையில் யாவராயிருந்தாலும் நியாயம் தவறியும் இந்தியர்களுடைய லட்சியத்திற்கு விரோதமாகவும் போவார்கள் இடை நிலையினின்று ஈவு இரக்கமின்றிக் கண்டிக்கப்படுவார்கள். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து இந்திய சனசமூகத்தை நிர்மாணிப்பது இப்பத்திரிகையின் லட்சியம். இதற்கு வருஷ சந்தா தபால்கூலி யுள்பட ரூபா ஐந்து ஆறுமாசத்திற்கு ரூபா மூன்று. வெளிநாடுகளுக்கு ரூபாஏழு, தேசமுன்னேற்றத்திற் கவசியமான எல்லா விஷயங்களும் தெளிவாகவும் தைரியமாகவும் எழுதப்படும். மாதிரிப்பத்திரம் அனுப்பப்படும்.

இ. சூரிய நாராயண ஐயர் பி. ஏ; பி. எல்;
பத்திராதிபர்,
"சமரசபோதினி" தஞ்சாவூர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.